தேர்வு எண் | | | | | |

## பாடம் –1.

## முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

**மேல்நிலை இரண்டாமாண்டு** **கணக்குப்பதிவியல்** **காலம் : 1.30 மணி**

**மொத்த மதிப்பெண் : 50**

பிரிவு – I

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.** **10 x 1 = 10**

1. **தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது**

அ) இறுதி முதல் கண்டறிய ஆ) தொடக்க முதல் கண்டறிய

இ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய ஈ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய

2. **பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்**

அ) ரொக்கம் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) முதல்

3. **கடனாளிகள் தொடக்க இருப்பு: ₹ 50,000, பெற்ற ரொக்கம்: ₹ 1,50,000, கடன் விற்பனை: ₹ 1,25,000; கடனாளிகள் இறுதி இருப்பு: ?**

அ) ₹ 50,000 ஆ) ₹ 2,00,000 இ) ₹ 25,000 ஈ) ₹ 1,75,000

4. **கீழ்க்கண்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு தொடர்பான எந்த விவரம் மொத்தக் கடனீந்தோர் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?**

அ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு

ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் இறுதி இருப்பு

இ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் செலுத்தியது

ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் தொடக்க இருப்பு

5. **கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது**

அ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு

இ) மொத்தக் கடனாளிகள் கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

6. **முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது**

அ) அரசு ஆ) சிறிய அளவிலான தனி ஆள் வணிகம்

இ) பன்னாட்டு நிறுவனங்கள் ஈ) நிறுமம்

7. **நிலை அறிக்கை ஒரு**

அ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு ஆ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு

இ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை ஈ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை

8. **தொடக்க முதல் ₹ 40,000, அவ்வாண்டின் எடுப்புகள் ₹ 25,000, அவ்வாண்டின் இலாபம் ₹ 20,000 மற்றும் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 40,000 எனில் இறுதி முதல் காணவும்.**

அ) ₹ 60,000 ஆ) ₹ 75,000 இ) ₹ 25,000 ஈ) ₹ 50,000

9. **முழுமை பெறா பதிவேடுகள் தொடர்பான கீழ்க்கண்ட எந்த வாக்கியம் சரியானது அல்ல?**

அ) ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளுக்கு மட்டும் ஏடுகள் பராமரிக்கப்படுகிறது.

ஆ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்

இ) வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை .

ஈ) இது நடவடிக்கைகளை பதிவு செய்யும் அறிவியல் தன்மையற்ற முறை

10. **உரிமையாளரின் சொத்துகள் ₹ 95,000 மற்றும் பொறுப்புகள் ₹ 45,000 எனில் அவருடைய முதல்**

தொகை

அ) ₹ 1,40,000 ஆ) ₹ 50,000 இ) ₹ 95,000 ஈ) ₹ 45,000

**பிரிவு – II**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:–** **3 x 2 = 6**

11. நிலை அறிக்கை என்றால் என்ன?

12. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?

13. இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.

14. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் (ஏப்ரல் 1, 2018) | 5,00,000 |
| ஆண்டின் இறுதி முதல் (மார்ச் 31, 2019) | 8,50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 1,20,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 70,000 |

15. பின்வரும் விவரங்களிலிருந்து கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டுத் தொகையினைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டின் தொடக்கத்தில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 |
| ஆண்டின் இறுதியில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,95,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |

**பிரிவு – III**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:–** **3 x 3 = 9**

16. முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?

17. முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகளைத் தருக ? (ஏதேனும் 3)

18. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த கடனீந்தோர் கணக்கு, செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரித்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 1.4.2017 அன்று இருப்புகள் – | | 31.3.2018 அன்று இருப்புகள் – | |
| பற்பல கடனீந்தோர் | 1,20,000 | பற்பல கடனீந்தோர் | 1,50,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 | செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 3,20,000 | செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டிற்கு செலுத்தியது | 30,000 |
| பெற்ற தள்ளுபடி | 10,000 | வாராக்கடன் | 16,000 |

19. 2019, மார்ச் 31 அன்று தாமஸ் என்பவரின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட இருப்புகள் பின்வருமாறு:

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 6,00,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,20,000 |
| அறைகலன் | 80,000 | கைரொக்கம் | 20,000 |
| நிலம் மற்றும் கட்டடம் | 3,00,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 |
| பற்பல கடனாளிகள் | 3,20,000 | சரக்கிருப்பு | 2,20,000 |

2019, மார்ச் 31 ஆம் நாளைய நிலை அறிக்கை தயாரிக்கவும் மற்றும் அந்நாளைய முதலைக் கண்டறியவும்.

20. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையைக் காணவும்:

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,30,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள் திருப்பம் | 25,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |

## பிரிவு – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:–** 5 x 5 = 25

21. விடுப்பட்ட தகவல்களை நிரப்பி தீர்வு காண்க:–

| இறுதி முதல் ₹ | எடுப்புகள் ₹ | கூடுதல் முதல் ₹ | தொடக்க முதல் ₹ | இலாபம் / நட்டம் ₹ |
|---|---|---|---|---|
| 1,00,000 | 40,000 | 20,000 | 90,000 | ? |
| ? | 30,000 | 40,000 | 80,000 | 20,000 |
| 70,000 | ? | 30,000 | 40,000 | 10,000 |
| 60,000 | 20,000 | ? | 50,000 | –10,000 |
| 2,00,000 | 30,000 | 10,000 | ? | 1,20,000 |

22. ஆனந்த் தன் கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரித்து வருவதில்லை . 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | 31.12.2018 ₹ | 31.12.2019 ₹ |
|---|---|---|
| வங்கி ரொக்கம் | 5,000 (ப) | 60,000 (வ) |
| கைரொக்கம் | 3,000 | 4,500 |
| சரக்கிருப்பு | 35,000 | 45,000 |
| பற்பல கடனாளிகள் | 1,00,000 | 90,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 80,000 | 80,000 |
| நிலம் மற்றும் கட்டடங்கள் | 1,40,000 | 1,40,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,70,000 | 1,30,000 |

ஆனந்த் தனது சொந்த பயனுக்காக ₹ 60,000 எடுத்துக் கொண்டார். அவர் தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக ₹ 17,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்கவும். பொறி மற்றும் இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்கவும்.

**23. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள் திருப்பம் | 50,000 |
| | | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,40,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |
| வாராக்கடன் | 30,000 | | |

**24. இரட்டைப் பதிவு முறைக்கும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளைத் தருக.**

**25. இராகேஷ் என்பவரின் பின்வரும் விவரங்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.**

| விவரம் | 31.3.2018 ₹ | 31.3.2019 ₹ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 2,20,000 | 1,60,000 |
| கடனாளிகள் | 5,30,000 | 6,40,000 |
| வங்கி ரொக்கம் | 60,000 | 10,000 |
| இயந்திரம் | 80,000 | 80,000 |
| பற்பல கடனீந்தோர் | 3,70,000 | 4,20,000 |

<u>பிற தகவல்கள்:–</u>

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வாடகை செலுத்தியது | 1,20,000 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 12,50,000 |
| பெற்ற தள்ளபடி | 35,000 | எடுப்புகள் | 1,00,000 |
| அளித்த தள்ளுபடி | 25,000 | ரொக்க விற்பனை | 20,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 11,00,000 | 1.4.2018 அன்று முதல் | 5,20,000 |